**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT

## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8213060

1. District : திருச்சி
மாவட்டம்
PS: (லஞ்ச ஒழிப்பு) மற்றும் கண்காணிப்பு திருச்சி,
காவல்நிலையம்
Year: 2024
ஆண்டு
FIR No.: 04
மு.த.அ. எண்
Date: 01.03.202
நாள்

2. (i) Act சட்டம்: Prevention of corruption Act 1988 (as amended in 2018) Sections பிரிவுகள்: 7 (a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from நாள் முதல் : 27.02.2024
Date to நாள் வரை : 10.00 hrs
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல்
Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : 01.03.2024
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்
Time : 07.00 hrs
நேரம்

(c) General Diary Reference : Entry No(s) -
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time :
நேரம்

4. Type of Information : Written/ Oral : கணினியால் தட்டச்சு செய்யப்பட்டது.
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக .

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 12 km கிழக்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்
Beat Number : -
முறைக் காவல் எண்
(b) Address : சார் பதிவாளர் அலுவலகம், திருவெறும்பூர் திருச்சிராப்பள்ளி.
முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : - District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : இரா. இராஜமாணிக்கம்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : இராமசாமி
தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 27.10.1952
நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : இந்தியன்
நாட்டினம்
(e) Passport No. :
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : -
வழங்கப்பட்ட நாள்
Place of Issue : -
வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : ரியல் எஸ்டேட் தொழில்
தொழில்
(g) Address : எண். 44, இந்திரா காந்தி தெரு, K. K. நகர், திருச்சி - 21
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. சிபவிராஜன், சார் பதிவாளர், திருவெறும்பூர் சார்பதிவகம், திருச்சிராப்பள்ளி,

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— காரியால் தாமதம் —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
[signature]

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 01/03/2024

15. Date & Time of despatch to the court: 01.03.2024
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 1130 hrs.

Name: பெயர் A. பிரசன்னா வெங்கடேஷ்
Rank: நிலை செயல் அலுவலர், உடல் திறன் மற்றும் ... நிலை

<u>கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.</u>

<u>திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.4/2024-இன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி.......</u>

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று **01.03.2024** பணியில் இருந்தபோது காலை **07.00** மணியளவில் திருச்சி, கே.கே.நகர், எண்.**44**, இந்திராகாந்தி தெருவில் வசித்து வரும் இராமசாமி மகன் திரு.இரா.இராதாகிருஷ்ணன், என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, அது குறித்து சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இயக்குநரகத்திற்கு தெரிவித்து, அந்த புகார்மனு குறித்து முதல் கட்ட விசாரணை செய்து, புகார் மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் சார்பதிவக, சார்பதிவாளர் திரு.சபரிராஜன் மற்றும் புகார்தாரர் திரு.இராதாகிருஷ்ணன் ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை செய்யப்பட்டது. இன்று **01.03.2024** காலை **08.30** மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.**04/2024** சட்டப்பிரிவு **7(a)** ஊழல் தடுப்பு சட்டம். **1988** (as amended in 2018)-ன்படி வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர் இரா.இராதாகிருஷ்ணன், த/பெ.இராமசாமி, எண்.**44**, இந்திராகாந்தி தெரு, கே.கே.நகர், திருச்சி-**21**. பெறுநர் லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரி அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகம், திருச்சி மாவட்டம். அய்யா, நான், திருச்சி, கே.கே.நகர், இந்திராகாந்தி தெருவில் எனது மனைவியுடன் வசித்து வருகிறேன். எனக்கு ஒரு மகளும், ஒரு மகனும் உள்ளனர், அவர்களுக்கு திருமணமாகி வெளிநாட்டில் வசித்து வருகின்றனர். நான் டால்மியா சிமெண்ட் நிறுவனத்தில் General Manager ஆக பணிபுரிந்து கடந்த **2012**ம் ஆண்டு Retirement ஆனேன். தற்சமயம் சொந்தமாக ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி பதிவு மாவட்டம், திருவெறும்பூர் வட்டம், திருவெறும்பூர் சார்பதிவாளர் அலுவலகத்தின் எல்லைக்கு உட்பட்ட நவல்பட்டு கிராமத்தின் புதிய சர்வே எண்.310/7A1A1-ல் கட்டுப்பட்ட DTCP அனுமதி பெற்று அண்ணாமலைநகர் என்று பெயரிடப்பட்டு காலி மனைகள் விற்பனை செய்யப்பட்டதில் இருந்து நான் 13 காலிமனைகளை எனது பெயருக்கு கடந்த **2019**-ம் ஆண்டு கிரயம் பெற்று வாங்கி வைத்திருந்தேன். அவ்வாறு கிரயம் பெற்று வைத்திருந்த காலிமனைகளில் மனை எண்.**75**-ல் **1000** சதுர அடிகளும் மற்றும் **75**ஏ என்ற மனையில் **1000** சதுர அடிகளும் ஆக இரண்டு காலிமனைகளையும் எனது நண்பர் மூலம் திரு.கார்த்திகேயன் என்பவருக்கு விற்பதாக கிரையம் பேசி முடிவு செய்தேன். அதனால், என் பெயரில் இருந்த மேற்படி இரண்டு காலிமனைகளுக்கான பத்திரங்கள் மற்றும் சம்மந்தப்பட்ட ஆவணங்களை எடுத்துக் கொண்டு கடந்த **16/2/2024** மாலை சுமார் **6½** மணியளவில் திருவெறும்பூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று அங்கு பணியில் இருந்த சார்பதிவாளர் திரு.சபரிராஜன் அவர்களை சந்தித்து அவரிடம் எனது ஆவணங்களை காண்பித்து கிரய ஆவணம் பதிவு செய்ய வேண்டிய விபரத்தை

கூறினேன். அவர் நான் கொடுத்த ஆவணங்களை சரிபார்த்துவிட்டு எல்லாம் சரியா இருக்கு எப்போ பத்திரம் பதிவு செய்து கொள்கிறீர்கள் என்று கேட்டார். அதற்கு நான், buyerக்கு லோன் Processல இருக்குன்னு சொல்லியிருக்காங்க சார், அதனால லோன் சேங்ஷன் ஆனவுடன் Registration-ஐ வைத்துக் கொள்கிறேன் சார் என்று சார்பதிவாளர் சபரிராஜனிடம் சொன்னேன். அதற்கு அவர் நீங்க எப்ப வேணும்னாலும் registration வச்சிக்கிங்க, registration பண்ணுறதுக்கு ரெண்டு நாள் முன்னாடியே என்ன வந்து பாத்திட்டு போங்க என்று சொல்லியிருந்தார். பின்னர், என்னிடம் இடம் வாங்கும் கார்த்திகேயன், அவருக்கு லோன் சேங்ஷன் ஆகிவிட்டதாக கடந்த திங்கட்கிழமை (26/2/2024) என்னிடம் சொல்லிவிட்டு, வரும் வெள்ளியன்றே registration வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் கூறினார். எனவே, வெள்ளியன்று registration வைத்துக் கொள்ளும் பணியை சார்பதிவாளர் திரு.சபரிராஜனிடம் தெரிவித்துவிடலாம் என்பதற்காக கடந்த செவ்வாய்கிழமை காலை சுமார் 10 மணிக்கு திருவெறும்பூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றேன். அப்போது சார்பதிவாளர் அலுவலகத்திற்கு இன்னும் வரவில்லை என்பதை தெரிந்து கொண்டு அந்த அலுவலகத்தின் பக்கத்தில் இருந்த வாகனங்கள் நிறுத்தும் இடத்தில் நின்று கொண்டிருந்தேன். அச்சமயம் அந்த இடத்தில் காரில் வந்து இறங்கிய சார்பதிவாளர் திரு.சபரிராஜன் அவர்கள் என்னை பார்த்ததும், என்ன சார் உங்க பார்ட்டிக்கு லோன் சேங்ஷன் ஆகிடுச்சா என்று கேட்டார். அதற்கு நான் ஆமாம் சார் என்று சொல்லிவிட்டு, வரும் வெள்ளிக்கிழமை registration வச்சிக்கிறேன் சார் என்றதும், உங்க டாக்குமெண்ட்ஸ் எல்லாத்தையும் அன்னைக்கே verify பண்ணிட்டேன்ல்ல என்றதும், நான் ஆமாம் சார் என்றேன். அதற்கு அவர் அன்னைக்கு உங்களிடம் எனக்கு உண்டான amount ஏதும் சொன்னேனா என்று கேட்டார். நான் அதெல்லாம் இல்ல சார் என்றதும் அவர், நீங்க ஒரு டாக்குமெண்டுக்கு 10 ரூபா வீதம் ரெண்டுக்கு இருபதாயிரம் கொடுத்திடுங்க என்று கூறினார். அதற்கு நான் அவரிடம், என்னோட பேப்பர்ஸ் எல்லாம் கிளியராத்தானே சார் இருக்கு, அப்புறம் எதுக்கு சார் இருபதாயிரம் ரூபா என்றேன். அதற்கு அவர், எங்களுக்கு நெறைய செலவுகள் இருக்குங்க, நாங்க என்ன எங்க கையில இருந்தா கொடுக்க முடியும், உங்கள போல ஆளுங்ககிட்டயிருந்துதான் கலெக்ஷன் பண்ணினாத்தானே முடியும், அதனால நீங்க உங்க registrationக்காக இருபதாயிரத்துக்கு ஒத்துக்கிட்டீங்கன்னா, ரெண்டு பத்திரமும் ரிஜிஸ்ட்டர் ஆகும், இல்லன்னா பண்ணமாட்டேன் என்று கறாராக கூறினார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. நான் அப்போதைக்கு வேறுவழியில்லாமல் அவரிடம் சரிங்க சார் என்று சொன்னதும் உடன் அவர் அங்கிருந்து சென்றுவிட்டார். நானும் வீட்டுக் சென்று விட்டேன். இன்று (1/3/2024) நான் பத்திரப்பதிவு வைத்துக் கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்துள்ளேன். எனது காலிமனை விற்பனைக்கான பத்திரப்பதிவிற்காக, திருவெறும்பூர் சார்பதிவாளர் திரு.சபரிராஜன் என்னிடம் லஞ்சமாக கேட்ட தொகையை அவருக்கு கொடுக்க எனக்கு விருப்பமில்லை. எனவே, என்னிடம் இருபதாயிரம் ரூபாய் லஞ்சம் கேட்ட திருவெறும்பூர் சார்பதிவாளர் திரு.சபரிராஜன் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு,

Sd.xxx 1/3/24 Submitted to the Court of Hon'ble Special Judge, Special court for the

Prevention of Corruption Act-1988, Trichy. Received this report at 07.00 Hrs., on 01/03/2024 and made Preliminary Enquiry and registered a case in Trichy V&AC Cr.No.04/2024 u/s 7(a) of the Prevention of Corruption Act-1988 (as amended in 2018) at 08.30 Hrs., on 01/03/2024. Sd.xxx (A.Prasanna Venkatesh) 01/03/2024 Inspector of Police, V&AC, Trichy.

01/03/2024

Dsp V&AC, Trichy.